இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 21-10-2023

# யாருக்கு அருகதை இல்லை?

“மகளிரைப் பற்றியோ மகளிர் இடஒதுக்கீடு சட்டம் பற்றியோ பேசுவதற்கு தி.மு.க.வுக்கு அருகதை இல்லை” என்று பா.ஜ.க.வில் தலைமை நாற்காலியில் இருந்து எப்போது வேண்டுமானாலும் தூக்கி வீசப்படும் நிலைமையில் இருக்கும் அண்ணாமலை சொல்லி இருக்கிறார்.

மகளிர் உரிமை மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய கேள்விகள் வெளிப்படையானவை. சுற்றி வளைத்து அவர் கேள்விகளை எழுப்பவில்லை. அதற்கு நேரடியாக அண்ணாமலை பதில் சொல்லி இருக்க வேண்டும். வழக்கம் போல தனது ஏர்போர்ட் பேட்டி பாணிகளைப் போல காற்றில் கம்பு சுற்றுகிறார்.

★ **நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால் பெண்ணினத்தை ஏமாற்ற மகளிருக்கு நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சட்டம் கொண்டு வருவதைப் போல கொண்டு வந்து பிரதமர் மோடி ஏமாற்றினார்.**

★ **மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு - அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. இது கப்சா விடும் காரியம் ஆகும்.**

**- என்பதுதான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைத்த வாதங்கள் ஆகும். இதில் தவறு ஏதாவது இருக்குமானால் - பிழைகள் இருக்குமானால் அண்ணாமலை சொல்ல வேண்டும். அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.**

**“1996 ஆம் ஆண்டு தி.மு.க. - காங்கிரஸ் ஆதரித்த ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டபோது இந்த நிபந்தனைகளை நாம் வைக்கவில்லை. 2010ஆம் ஆண்டும் நமது கூட்டணி அரசு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தபோதும் இது மாதிரியான நிபந்தனைகளை வைக்கவில்லை. இப்போது பா.ஜ.க. நிபந்தனை போடுகிறது என்றால் என்ன அர்த்தம்?” என்று முதலமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். அந்தக் கேள்விக்கும் அண்ணாமலையால் பதில் சொல்ல முடியவில்லை.**

உடனே பொத்தாம் பொதுவாக, ‘தி.மு.க.வுக்கு அருகதை இல்லை’ என்பதே அனைத்துக் கேள்விகளுக்குமான பதிலாக இருந்தால் இதனைச் சொல்வதற்கு அண்ணாமலைக்கோ, பா.ஜ.க.வுக்கோ என்ன அருகதை இருக்கிறது என்ற கேள்வியைத்தான் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மணிப்பூர் என்ற மாநிலம் கடந்த மே மாதம் முதல் பற்றி எரிகிறதே, அங்கு போனாரா இந்தியாவின் பிரதமர்? இந்தியாவில்தானே மணிப்பூர் இருக்கிறது. மணிப்பூருக்கும் சேர்த்துதானே அவர் பிரதமர். மணிப்பூரை ஆள்வதும் பா.ஜ.க. அரசுதானே? அங்கே இரண்டு பெண்கள் ஆடை களையப்பட்டு அழைத்து வரப்பட்டார்களே, அப்போதாவது அந்த மாநிலத்துக்குச் சென்றாரா பிரதமர்?

எத்தனையோ கொடுமைகள் மணிப்பூரில் இந்த ஐந்து மாதமாக அரங்கேறி வருகிறது. அதில் மிகக் கொடூரமானது இந்த இரண்டு பெண்களுக்கும் நடந்தவை ஆகும். குக்கி இனப் பெண்களை ஆடை களைந்து ஒரு கும்பல் இழுத்து வரும் காட்சி சமூக வலைதளங்களில் பரவிய பிறகு, ‘இது போல நிறைய நடந்துள்ளதே!’ என்று சொன்னவர்தான் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங்.

‘இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவிய பிறகுதான் இந்தச் சம்பவத்தின் கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது. வீடியோ வந்த பிறகுதான் 6 பேரை கைது செய்தோம்’ என்று சொன்னார் பா.ஜ.க. முதலமைச்சர். அதாவது மே மாதம் 4ஆம் தேதி நடந்த கொடூரத்துக்குக் காரணமானவர்களை ஜூலை மாதம் 18 ஆம் தேதிக்கு மேல்தான் கைது செய்கிறார் பா.ஜ.க. முதலமைச்சர். அதன் பிறகுதான் பிரதமர் கண்டிக்கிறார். இந்தக் கொடூரம் நடந்ததுமே மாநில பா.ஜ.க. அரசுக்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் அது தெரிந்திருக்கும்.

**‘நான் இழுத்துச் செல்லப்பட்ட போது போலீஸ் வேடிக்கை பார்த்தது’ என்று அந்தப் பெண்கள் பேட்டி அளித்துள்ளார்கள். “எங்களை வன்முறைக் கும்பல் புதருக்குள் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார்கள். அப்போது போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. அதில் நான்கு போலீஸ்காரர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். வன்முறைக் கும்பல் எங்களை இழுத்துச் செல்வதை அந்த நான்கு போலீஸ்காரர்களும் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எங்களுக்கு உதவவில்லை” என்று ஒரு பெண் பேட்டி அளித்துள்ளார். இதுதான் பெண்கள் பாதுகாப்பில் பா.ஜ.க.வுக்கு உள்ள அருகதை ஆகும்.**

**கைகட்டி வேடிக்கை பார்த்தது பா.ஜ.க. மாநில அரசு. அந்த மாநில அரசை இன்று வரை காப்பாற்றி வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

மல்யுத்த வீராங்கனைகளை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய பா.ஜ.க. எம்.பி.மீது வழக்குப் பதியவே மல்யுத்தம் நடத்த வேண்டி இருந்தது. பா.ஜ.க. இந்த ஆண்டு ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகட், சாக்ஷி மல்லிக், பஜ்ரங் புனியா ஆகியோர் பா.ஜ.க. எம்.பி.யான பிரிஜ் பூஷண் ஷரண் சிங் மீது பல கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். பிரிஜ் பூஷண் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாக வினேஷ் போகட் அழுதுகொண்டே கூறினார். இந்த விவகாரம் பெரிதாக ஆனதும் உடனடியாக அவர் மீது வழக்குப் பதிந்திருக்க வேண்டும். அதனைச் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷண் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ் காவல் நிலையத்திற்கு புகார் செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீஸார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏன் வழக்குப் பதியவில்லை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். ‘போக்சோ’ சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்ததன் பின்னணி அனைவர்க்கும் தெரியும். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தி வருகிறார்கள். **இவர்களுக்கு பெண்களைப் பற்றிப் பேச அருகதையோ, யோக்கியதையோ துளியும் உண்டா?**

●●

## ஆ.இராசா எம்.பி. துவக்கி வைத்தார்!

# பெரம்பலூரில் மருத்துவ முகாம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

பெரம்பலூர், அக். 21-

பெரம்பலூர் மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மருத்துவ அணி சார்பில் ரத்ததான முகாமை கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., துவக்கி வைத்தார். 100 பேர் கலந்து கொண்டு 100 யூனிட் ரத்தம் வழங்கினார்கள். அந்த ரத்தம் பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

ரத்தம் வழங்கியவர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை ஆ.இராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்கள்.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ர மணியன், மா.பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மருத்துவர் ஜெயலட்சுமி, மருத்துவர் அ.கருணாநிதி, மருத்துவர் தனபால், மருத்துவர் பாலச்சந்தர், மருத்துவர் சிலம்பரசன், சோலைமுத்து, பிரேமலதா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி மணம் பூண்டி ஒன்றிய ஊராட்சிகளில் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் உள்ள வாக்குச்சாவடி முகவர்களிடம் அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனை நடத்தினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, டி.என்.முருகன், அ. சா.ஏ.பிரபு, தனலட்சுமி உமேஸ்வரன், ராயல் அன்பு, சுந்தரமூர்த்தி, இராஜசேகர், சக்திசிவம், மணிவண்ணன், ஜெய்சங்கர், வெங்கட், அந்தோணியம்மாள், கணேசன், பிரகாஷ், அய்யப்பன், ப.அன்பரசு, ஆசை தம்பி, அஸ்வத், வினோத், அகிலன், அருணா முருகன், இராமச்சந்திரன், சூரியகலா திருமலை, முத்தம்மாள் ஏழுமலை, செந்தில்குமார், சுந்தரி இராமமூர்த்தி, குணா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## என்.கௌதமன், உ.மதிவாணன், ஜானிடாம் வர்கீஸ் பங்கேற்பு!

# நாகை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது!

நாகை, அக்.21 -

நாகை மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடுகள் பணிகள் குறித்த அனைத்துத் துறை அதிகாரிகளுடனான ஆய்வு கூட்டம் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்திற்கு சட்டதுறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை தாங்கி பேசுகையில் நாகை மாவட்டத்தில் சென்ற வருடம் 630 மி.மீ. மழை பெய்துள்ளது. வெட்டாறு உள்ளிட்ட 814 முக்கிய நதிகளின் கரைகள் நீர் வள ஆதாரத்துறை மூலம் பலப்படுத்தப்பட்டுள்ளது. 5000 மணல் மூட்டைகள், 20 யூனிட் மணல், 65 ஆயிரம் காலி சாக்கு பைகள், 1250 சவுக்கு கட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

நீர் நிலைகளை நீர் வள ஆதாரத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தீயணைப்புதுறை, நெடுஞ்சாலைத் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் ஊரக வளர்ச்சிச் துறை அலுவலகங்களில் போதிய அளவில் மரம் அறுக்கும் கருவிகள், ஜே.சி.பி. பொக்லைன் போன்ற இயந்திரங்கள் உள்ளன.

ஆபத்தில் சிக்சிய பொது மக்களை விரைந்து காப்பாறக்கூடிய உபகரணங்கள் இருப்பில் உள்ளது. பெரும் மழைக்காலங்களில் 73 திருமண மண்டபங்கள், 145 பள்ளி கட்டிடங்கள், கல்லூரிகள் மற்றும் சமூதாய கூடங்களில் மக்களை தங்க வைத்து உணவு வழங்க தயார் நிலையில் உள்ளன. புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் பேரிடர் பாதுகாப்பு மையங்கள் 17ல் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக அடிப்படை வசதிகளையும், பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்ள பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

வெள்ளக் காலத்தில் மாவட்ட நிர்வாகத்திற்கு உதவி செய்ய பேரிடர் பயிற்சிப் பெற்ற 300 ஆப்தமித்ரா பயிற்சி தன்னார்வலர்கள் மற்றும் 5000 முதல் நிலை பொறுப்பாளர்களும் தயார் நிலையில் உள்ளனர். அனைத்து நியாய விலைக் கடைகளிலும் போதுமான அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக 415 மெட்ரிக்டன் அரிசி, 213 நியாய விலைக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 24 ஆயிரம் லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் அனைத்து பஞ்சாயத்துக்களுக்கும் பிளீச்சிங் பவுடர் மற்றும் கிரிமி நாசினிகள் வழங்கப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் மீட்பு நடவடிக்கைக்கு மோட்டார் படகு, =பைபர் படகுகள் தயார் நிலையில் உள்ளன. நெடுஞ்சாலைத் துறையின் பேரிடர் மீட்புப் பணிக்கு போதிய குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். காவல் துறை மற்றும் தீயணைப்புத்துறையின் பேரிடர் காலத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போதிய அளவில் தயார் நிலையில் உள்ளனர். இத்துறைகளில் மீட்பு குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பொதுசுகாதாரத் துறையில் அனைத்து உயிர் காக்கும் மருந்துகளும் போதிய அளவில் இருப்பில் உள்ளன. மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருந்துகள் இருப்பில் உள்ளது. எதிர்வரும் வடக்கிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

ஆய்வு கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ்சிங், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா.மாரி முத்து, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட வனஅலுவலர் அபிஷேக்தோமர், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா. குமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். பால்ராஜ் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருவெறும்பூர் தொகுதி முல்லைக்குடி காந்திபுரம் பகுதியில் வசிக்கும் லோகநாதன், சுந்தராம்பாள் தம்பதியினரின் வீடு தீப்பற்றி எரிந்ததை கேள்வியுற்று அவர்களை சந்தித்து ஆறுதல் கூறி நிதியுதவியை வழங்கினார். நிகழ்வின்போது வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ்.எம். கருணாநிதி, முல்லக்குடி சண்முகம், ஊராட்சி மன்ற தலைவர் ஒன்றிய துணை செயலாளர் ஒட்டக்குடி ரமேஷ், ஒன்றிய கவுன்சிலர் மகாதேவன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

